RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd2331

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

# Beliefs in God and Religious Principles of Thinaikudis

# திணைக்குடிகளின் கடவுள் நம்பிக்கைகளும் சமயக் கொள்கைகளும்

**N. Vennila** [a, *]

[a] Department of Tamil, Krishnasamy College of Science Arts and Management for Women, Cuddalore-607109, Tamil Nadu, India.

*Corresponding author Email: kvbs1215vennilan@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2331

Received: 09-05-2023; Revised: 11-08-2023; Accepted: 17-08-2023; Published: 26-08-2023

**Abstract:** The Primitive people's principles on God and religion and the religious principles came into being by the arrival of the Aryans were found in the ancient human society. Placing tombstone for dead is a significant ritual in Tamil tradition. This ritual marks the beginning of worship. It seems that the practice of placing tombstone was before the time of Tolkappiyar. The ancient people believed in ghosts and believed that there was a deity under the tree. Idol worship was also significant among ancient peoples. It is also proved that people of Harappa Mohanjataro worshiped Shiva Linga. KK Pillai says that this worship is a form of Palkuri worship, and if research confirms that Tamil people belong to this ancient culture, Palkuri worship has existed among Tamil people thousands of years ago. Ancient Tamil worship is the forerunner of today's religious doctrine. Due to Vedic influence there have been changes in religious tradition. The religious doctrine of the ancient Hindus was completely outside the Vedic scriptures. The deity symbols of the Thinaikudis are a reflection of the caste. It indicates the status of ancestor worship. The gods were felt to be present in the house, as life companions.

**Keywords:** Sangam, Tamil worship, KK Pillai, Thinaikudi

**Language: Tamil**

## முன்னுரை

தமிழகத்தில் வாழ்ந்த ஆதிகுடிகளின் கடவுள் பற்றிய கொள்கைகளும் சமயம் பற்றிய கொள்கைகளும் ஆரியர் வருகையால் ஏற்பட்ட சமயக் கொள்கைகளும் பண்டைக்கால மானிட சமூகத்தில் காணப்பட்டன. தமிழர் மரபில் குறிப்பிடத்தக்க வழிபாடான இறந்தோருக்கு வீரக்கல் நடுகல் வழக்கமானது. இவ்வழக்கம் வழிப்பாட்டின் தொடக்கமாகும். நடுகல் என்னும் வீரக்கல் நடும் வழக்கம் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இருந்தது எனலாம். பழந்தமிழர்கள் பேய் பூதங்கள் பற்றி நம்பிக்கைக் கொண்டிருந்தனர். மரத்தின் கீழ் தெய்வம் இருப்பதாக நம்பினர். பிறை வழிபாடும் பண்டைய மக்களிடையே இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஹரப்பா மொகஞ்சதாரோ மக்கள் சிவலிங்க வழிபாடு செய்துள்ளனர் என்று அங்கு கிடைத்துள்ள சான்றுகள் சிலவற்றால் அறிகின்றோம். இவ்வழிபாட்டை, பால்குறி வழிபாட்டின் வடிவமாகக் கொள்கிறார்கள். தமிழர்கள் இப்பண்டைய நாகரீகத்தைச் சார்ந்தவர்கள் என்று ஆராய்ச்சியினால் உறுதியாகுமாயின் பால்குறி வழிபாடு இன்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழரிடையே நிலவி வந்ததெனக் கொள்ளலாகும் என்கிறார் கே.கே.பிள்ளை (Pillai, 2002).

## ஐந்திணைக் குடிகளின் வழிபாடு

குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் என்னும் ஐந்திணைக்குடிகளும் சேயோன் மாயோன் கொற்றவை வேந்தன் வருணன் என்னும் கடவுள்களை வழிபட்டதாக தொல்காப்பியம் கூறுகிறது. இதில் பாலை நிலத்திற்கு கடவுள் வரையறையை தொல்காப்பியம் கூறவில்லை. பாலை நில வேடர்கள் நடுகல்லையும் இறந்தவர்களையும் பதுக்கைகளில் உள்ள தெய்வங்களையும் வழிபட்டனர். குறிஞ்சி

நிலமக்கள் மலைக்கடவுளாகிய சேயோன் என்று சுட்டப்படும் முருகனை வேங்கை மலர் கொண்டு பூசித்து பலிகளையும் இட்டனர். இவ்வழிபாடு தம் சுற்றத்தாரோடு நடைபெற்றது. முல்லை நிலமக்கள் ஆயரும் ஆய்ச்சியரும் மாயோனாகிய திருமாலை தெய்வமாக வழிபட்டனர். இவ்வழிபாட்டின் போது குரவைக்கூத்து ஆடுவர். முல்லை நிலமக்கள் நடுகல்லையும் சிறுதெய்வங்களையும் வழிபட்டனர். நெய்தல் நிலமக்கள் கோட்டுச்சுறாமீன் கொம்பை நட்டு வழிபாடு செய்தனர். அதில் கடவுள் உறைவதாக நம்பினர். இவர்கள் வழிபாட்டில் உணவும் கள்ளும் உண்டு ஆடிப்பாடி வழிபாடு செய்தனர். மருத நிலமக்கள் மேற்கூறிய வழிபாட்டு முறைகளில் வேறுபட்ட தன்மைகளை உடையவர்கள் ஆவர். மருத நிலமக்கள் கோவில்களிலும் சிற்றூர் பேரூர்களில் இருக்கும் பொதியிலும் வழிபாடுகள் செய்தனர்.

## நம்பிக்கைகள் பற்றி மானிடவியல் கருத்து

மனித இனத்தாரிடம் ஏற்பட்ட அச்சவுணர்வின் வெளிப்பாடே வழிபாடாக அமைந்தது. வழிபாட்டின் பயன் நம்பிக்கையை தோற்றுவித்துள்ளது. நம்பிக்கைகள் இயற்கையின் மாற்றங்களால் ஏற்பட்ட அனுபவங்களே ஆகும். வழிபாடுகளின் தொடக்கம் 'நடுகல்' வழிபாடாகும். பின் சிறுதெய்வ வழிபாடாக தோற்றம் பெற்றது. பண்டைத்தமிழர்கள் பல்வேறு நிலைகளில் தெய்வவழிபாட்டையும் சடங்குகளையும் விழாக்களையும் கொண்டிருந்தனர்.

இயற்கையின் பேராற்றலைக் கொண்டு விளங்கும் ஞாயிறு திங்கள் மலை ஆறு மரம் புயல் கடல் மழை முதலிய இன்னும் பல இயற்கைக்கூறுகள் மனித வாழ்வை நிர்ணயிப்பதில் வல்லமை படைத்தவை என்று தொல்குடிகள் மேற்கொண்ட 'இயற்கை வழிபாட்டிலிருந்தே (யேவரசளைஅ) தொல் சமயம் தோன்றியது என்று மேக்ஸ் முல்லர் முன்மொழிந்தார். பண்டைய எகிப்தில் கிடைத்த தொல்லியல் சான்றுகளுடன் பிற பகுதிகளில் கிடைத்த தரவுகளோடு மேக்ஸ்முல்லர் தன்கோட்பாட்டை முன்வைத்தார் (Sambath et al., 2011). சங்க காலப் பண்பாட்டின் வழிபாடுகள் பல்வேறு வகையினைக் கொண்டதாகும். தமிழரின் முந்தைய காலந்தொட்டு மாற்றம் பெற்றதுமாகும்.

## ஐந்திணைக்குடிகளின் கடவுள் கோட்பாடு

சங்க காலத்திலிருந்து குலக்குறி வழக்கம் (வழடநஅளைஅ) இன்றும் பழங்குடி மக்களிடம் காணமுடிகிறது. சாதியச் சமுதாயத்திலும் இதன் மீதி மேலும் தொடர்ந்து கொண்டே வருகிறது. ஆல்இ கடம்பு பனை முதலிய மரங்களில் தெய்வங்கள் உறைவதாக நம்பி, அக்கடவுளுக்கு பலியிட்டு வணங்கினர். இம்முறை இன்றளவும் அரசமரம் ஆலமரத்தின் கீழ் ஐய்யனா வீரன் கருப்புச்சாமி என்னும் தெய்வப்பெயர்களில் வழிபாடு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. அதுபோல் பண்டைய மக்கள் முற்றிய செங்கடம்பு என்றழைக்கப்படும் மராஅமரம் வேப்பமரம் போன்றவற்றை வழிப்பட்டனர். இம்முறையும் இன்றைய சிறுதெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியாக அமைகிறது. பனை ஆல் கடம்பு மரங்களில் உறையும் கடவுளுக்கு பசுவைப் பலியிட்டு வணங்குவதை,

"வயவாள் எறிந்து வில்லின் நீக்க
பயம்நிரை தழீஇய கடுங்கண் மழவா
அம்புசேண் படுத்து வன்புலத்து உய்த்தென
தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்
கொழுப்புஆ எறிந்து குருதி தூஉய்
புலவுப்புழுங்கு உண்ட வான்கண் அகல்அறை"

என்று அகநானூறு சான்றளிக்கிறது (Balasubramaniyan, 2004).

## கடவுள் பற்றி தொல்காப்பியம் விளக்கம்

சங்க இலக்கியங்களில் கடவுள், தெய்வம் என்னும் சொற்கள் எல்லா வகை சாமிகளுக்கும் வழங்கப்படுகிறது. தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் 'கடவுள்' என்னும் சொல் பொதுப்பட கூறப்பட்டுள்ளது (Thamizhannal, 2010).

சங்கப் பாடல்களில் கடவுள் என்னும் சொல் 89 இடங்களில் வருகிறது. இச்சொல்லிற்கு, தெய்வம்' எனப் பொருள் கற்பிக்கப்பட்ட இடங்கள் 57. பிற இடங்களில் மேன்மை சான்றோர். துறவிகள், நடுகல் வீரர்கள் என்றும் அர்த்தங்கள் கற்பிக்கப்பட்டன (Sambath et al., 2011).

திணைக்குடியினரின் மரபு வழியாக வந்த நம்பிக்கையை வழிபட்டமுறையால் தெய்வம் என்று கூறினர். இது இல்லுறை தெய்வம் என்ற பெயரால் குறிக்கப்படுகின்றன. சான்று,

“நல்இறை மெல்விரல் கூப்பி

இல்உறை கடவுட்கு ஆக்குதும் பலியே”

என்று அகநானூறு கூறுகின்றது (Balasubramaniyan, 2004).

## திணைக் குடிகளின் தெய்வ அடையாளங்கள்

ஐந்திணைக் குடிகளின் வழிபாட்டு முறையில் சிறுதெய்வ வழிபாட்டு முறை சிறப்பிடம் பெறுகிறது. குறளனும் கூனனும் காதல் செய்யும் நிலையினைக் குறிப்பிடுகையில் கோவில் பற்றி குறிப்பிடுகிறது. திணைக்குடித் தெய்வ அடையாளங்களாக பட்டியலிடுகிறது. கோவில் கட்டுமானமுறை பற்றிய செய்திகள் விரிவாக இல்லை எனலாம்.

“பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்

ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்

வாள்வளை மேனி வாலியோன் கோயிலும்

நீலமணி நெடியோன் கோயிலும்

மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்” (Subramaniyam, 2015)

என்றும்

“நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்

உவணச் சேவல் உயர்ந்கோன் நியமமும்

மேழிவலன் உயர்ந்த வெள்ளை நகரமும்

கோழிச் சேவல் கொடியோன் கோட்டமும்

களத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்”

என்றும் சிலப்பதிகாரம் வகைப்படுத்துகிறது (Subramaniyam, 2015).

## கடவுள் போகிய கந்தம்

கடவுள் உறையும் கந்தத்திற்குப் பலியிட்டு வழிபட்ட நிகழ்வை சங்க இலக்கியம் கூறுகிறது. கறையான் புற்றுக்கள் நிறைந்த சுவரினை உடைய புதர்கள் படர்ந்து காணப்படும் அம்பலத்தில் வழிபடுபவர்கள் இல்லாமையால் தெய்வம் போய்விட்டது எனக் குறிப்பிடும் சங்கப்பாடல் மூலம் கோவில் அமைப்பு முறையை அறிய முடிகிறது என்பதை

“புற்றுடைச் சுவர புதல் இவர் பொதியில்,

கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து

உடன்உறை பழமையின் துறத்தல் நல்லாது” (Balasubramaniyan, 2004)

எனும் பாடல் வரியால் கட்டடத் தொழிநுட்பமுடைய சங்ககாலத்தில் கடவுளுக்கென்று கோயில் வடிவங்களையும் கண்டறிந்திருந்தனர் என்பது தெளிவாகிறது. மேலும் கடவுள் வடிவத்தை தூணில் வரைந்து வழிப்பட்டனர் என்பதை கலித்தொகை (29) கூறுகின்றது (Parimanam & Balasubramaniyam, 2004). இத்தகை வழிபாடு சங்ககாலத்திற்கும் முற்பட்ட வழிபாட்டுமுறைக்குச் சான்றாக அமைகிறது. பண்டைத்

திணைக்குடிகள் தெய்வ வழிபாட்டை சுவரிலும், தூணிலும் வரைந்து வழிபட்டு பலிகள் இட்டனர் என்பதை மேற்கண்டவாறு அறியமுடிகிறது.

## இல்லுறைத் தெய்வம்

இல்வாழ்க்கையில் ஈடுபடும் மக்கள் தம் வாழ்வுக்குத் துணையாகிய தெய்வம் தம்முடைய இல்லத்தில் இருப்பதாகக் கொண்டு அதனை இல்லுறை தெய்வமெனக் கொண்டு கடவுளை நாள்தோறும் வழிபடும் மரபினைக் கொண்டிருந்தனர். மணமாகாத பெண்டிர் தமது திருமணம் நிறைவேறும் பொருட்டு இல்லுறை தெய்வத்தை வழிபட்டனர் என்பதை,

"வல்லே வருக வரைந்த நாளென

நல்லிறை மெல்விரல் கூப்பி

இல்லுறை கடவுட்கு ஆக்குதும் பலியே"

என்றும் அகநானூற்றுப் பாடலால் அறியப்படுகிறது (Balasubramaniyan, 2004).

சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் திணைக்குடித் தெய்வங்களில் வைதிகத் தாக்கம் பெற்றவைகள் முருகனும் கொற்றவையும். பண்டைக் காலத்தின் மரபுத் தொடர்ச்சியாக உள்ள நடுகல் சூர் கொல்லிப்பாவை மலையுறை தெய்வம் போன்றவையும் சங்ககால இறுதியில் பௌத்த சமணத்திலிருந்து அப்பாற்பட்ட பாசண்ட சாத்தனர், இயக்கி போன்றவையும் பதிவு செய்யப்பட்டன. பண்டைத் தமிழர்களிடம் வழிபாடு பெறாத ஆனால் அச்சமூட்டுபவையாகக் கருதக்கூடிய பேய் மகளிர் பற்றியசெய்திகளும் சுடுகாடு பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன.

இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு சக்திக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள தொடர்பு. ஒரு கடவுள் அல்லது பல கடவுள் அல்லது மனிதரால் புனிதமாகக் கருதப்படும் ஏதோ ஒரு சக்திக்கும் மனிதர்களுக்கும் இடையேயான தொடர்பையும் குறிக்கும். மனிதனுக்கு ஆதிகால சமூகங்களிலிருந்தே சமய நம்பிக்கைகள் இருந்து வந்துள்ளதாகத் தொல்பொருள் ஆய்வுச்சான்றுகள் கூறுகின்றன. இந்நம்பிக்கைகள் சமூக உறுப்பினர் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இவை புராணங்கள், சித்தாந்தங்கள் சடங்குகள் போன்றவற்றின் மூலம் சமூகக் கலாச்சாரம் அறக்கொள்கைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. இத்துடன் ஒழுக்கநெறிகள் சரியான நம்பிக்கைகள் சமயச் சடங்குகளில் பங்கேற்றல் ஆகியவையும் சமய வாழ்க்கையின் அம்சங்களாகும். சமயங்கள் மானுட வாழ்க்கையின் தொடக்காலங்களிலிருந்து மனிதன் எழுப்பிய நாம் ஏன் துன்புறுகிறோம்? உலகில் தீமை ஏற்படக் காரணம் என்ன? நாம் இறந்த பின் நமக்கு நிகழ்வது என்ன? போன்ற அடிப்படையான கேள்விகளுக்கு பரம்பொருளுடன் உறவு கொள்வதன் மூலம் விடைகாண முயன்றுள்ளனர். விரிவாக பேசும்போது சில சமயங்கள் புறம் சார்ந்தவை மற்றவை அகம் சார்ந்தவை என்கிறது.

## எழுது அணி கடவுள்

பாழடைந்த ஊரில் பீர்க்கங்கொடி படர்ந்த பாழடைந்த இடத்தில் மாடப்புறாக்கள் வெளியேறும் மாடங்கள் கொண்டது. அவ்விடத்தில் சுவற்றில் எழுதி வைக்க கடவுளின் உருவம் கூட மறைந்துவிட்டது இங்கு தொடர்ந்து நடந்த பலி வழக்கம் இப்போது இல்லை. இவ்விடத்தில் திண்ணை மெழுகப்படவில்லை இதனால் நாய்கள் இங்கு குட்டிப்போட்டுள்ளன என்று அகநானூறு 'எழுது அணி கடவுள்' பற்றி கூறுகின்றது.

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென

மணிப்புறாத் துறந்த மரம்சோர் மாடத்து

எழுது அணி கடவுள் போகலின்இ புல்லென்று

ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணைப்\

பால்நாய் துள்ளிய பறைக்கட் சிற்றில்

குயில்காழ் சிதைய மண்டி அயில்வாய்க்

கூர்முகச் சிதலை வேய்ந்த

போர்மடி நல்இறைப் பொதியி லானே" (Balasubramaniyan, 2004)

இப்பாடல் அடிகளில் பண்டைத்திணைக்குடிகளின் வழிபடு தெய்வமும், வழிபாடு பற்றியும் கூறப்பட்டுள்ளது.

## நடுகல் வழிபாடு

நடுகல் போரில் வீரமரணம் அடைந்த மறவனுக்கு அமைக்கும் நினைவுச் சின்னமாகும். நாட்டிற்காகத் தன்னுடைய உயிரைக் கொடுப்பதைப் பெரும் புகழாக எண்ணினர். போரில் வெற்றியைத் தந்த மறவர்களுக்கு நிலங்கள் மானியமாக வழங்கப்பட்டன. போரில் வீரமரணம் அடைந்தவர்க்கு நடுகற்கள் வைக்கப்பட்டன. நடுகல் வழிபாடு அகால மரணத்துடன் தொடர்புடையது. இது வீரமிக்க ஆண்மகனின் வலிமை முழுமையும் வெளிப்படுத்தி பின் இறந்தவனுக்குச் செய்யும் வழிபாடாகும்.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்

சீர்த்த மரபின் பெரும்படை வாழ்த்தல் என்று

இருமூன்று மரபின் கல்லொடு புணர" (Thamizhannal, 2010)

என்கிறது தொல்காப்பியம். கவர்ந்த ஆநிரைகளை மீட்கச் செல்லும்போது இருதரப்பினருக்குமிடையே எழும் போரில் இறந்துபடும் வீரர்களுக்கு நடப்படும் வீரக்கற்கள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

## நடுகல் வழிபாட்டு முறை

களத்தில் இறந்துபட்ட வீரனின் உடம்பைப் புதைத்தவிடத்து, ஒரு கல்லில் அவ்வீரனின் பெயரும் பீடும் எழுதி நடுதல் மரபு. இறந்தவிடத்தன்றி அவனை நினைவு கூரும் வகையில் பிறந்த இடத்தினும் நடப்படும் கல்லும் நடுகல்லாகும். இது வீரக்கல் என்றழைக்கப்படுகிறது. கோட்டை வீராகிய வெட்சியார், கூரிய முனையும் நீண்ட வேலினையுடையவர்கள் ஆவர். வெட்சியார் கவர்ந்துச் சென்ற ஆநிரைகளை வில்லினை ஏராக உடைய கரந்தையர் மீட்டு வந்தனர். வெட்சியாரை மேட்டு நிலத்தில் வீழ்த்தினர். தம் வலிய ஆண்மைக்கு அறிகுறியான மணற்குன்றின் மேலுள்ள நடுகல் தெய்வத்தை வழிபடுவதற்காக அக்கல்லில் மயிற்தோகைகளைச் சூட்டினர். துடியை முழக்கி நெல்லால் ஆக்கிய கள்ளோடு செம்மறிக்குட்டியைப் பலி கொடுத்தனர் என்பதை

"நுழை நுதி நெடு வேல் குறும் படை மழவர்

முனை ஆத் தந்து முரம்பின் வீழ்த்த

வில் ஏர் வாழ்க்கை விழுத் தொடை மறவர்

வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்

நடுகல் பீலி சூட்டி துடிப்படுத்து

தோப்பிக் கள்ளொடு துரூஉப் பலி கொடுக்கும்" (Balasubramaniyan, 2004)

என்று அகநானூற்றுப்பாடல் குறிப்பிடுகின்றது.

மேலும் போரில் இறந்த வீரனின் பெயரும் பெருமையும் பொறிக்கப்படும் வழக்கம் இருந்தது. நடுகல்லிற்கு மயிற்பீலி சூட்டப்பட்டது. நடுகல்லின் முன் வேல் ஊன்றப்பட்டது. கேடயம் சார்த்தப்பெற்றது.

"கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்

பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்

பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்

வேல்ஊன்று பலகை வேற்றுமுனை கெடுக்கும்" (Balasubramaniyan, 2004)

என்று அகநானூறு விளக்கமளிக்கிறது. இத்தகைய நடுகல் வழிபாடும் நடுகல் அமைப்பும் தற்கால ஐயனார் கோவில் வடிவத்தின் முந்தைய வடிவமாகக் கருதமுடிகிறது.

போரில் பின்தங்கிய சமூகங்களில் வீழ்ந்துபட்டவர்கள் அநாம தேயங்களாய்க் காட்டு வழியிலும் ஊர்ப்புறத்திலும் ஆங்காங்கு நடுகற்களாக நின்றனர் கிராம தேவதைகளாக மாறினர் (1966:40) என்று கைலாசபதி கூறுகிறார். நடுகல் வழிபாடு திணைக்குடிகளின் வழிபாட்டின் தொடக்கமாக விளங்கியது.

## பாலையும் நடுகல் வழிபாடும்

பாலை நில களவும், கொலையும் நிறைந்தது ஆகும். தனிமை கொண்ட பாலை வழியில் கூர்மையான பற்களை உடைய செந்நாய் வருத்தும். தாம் வில்லில் வைத்து எய்தும் அம்பு பிழையாது இறந்துபட்டோரின் பெயரும் பீடும் எழுதிய எழுத்துக்களை உடைய நடுகற்கள் நிழலாக அமையும் என்று அகநானூறு கூறுகிறது.

"வள் எயிற்றுச் செந்நாய் வருந்து பசிப்பிணவோடு

கள்ளி அம்காட்ட கடத்திடை உழிஞ்சில்

உள்ஊன் வாடிய கரிமூக்கு நொள்ளை

பொரி அரை புதைத்த புலம்பு கொள்இயவின்

விழுத் தொடை மறவர் வில்இட வீழ்ந்தோர்

எழுத்துடை நடுகல் இன்நிழல் வதியும்" (Balasubramaniyan, 2004)

இதில் பெயர் பீடு எழுதப்பட்டதால் எழுத்துடை நடுகல் என்றழைக்கப்படுவதைச் சுட்டுகிறது.

"விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்

எழுத்துடை நடுகல்"

என்று ஐங்குறுநூறும் சான்றளிக்கிறது (Avvai Duraisamy Pillai, 1957).

பாலை நில ஆறலைக்கள்வர்கள் கொல்லப்பட்டவரின் உடம்பின் மேல் தழைகளை அடையாளமாகப் போடுவதையும். பின்னர் அதே இடத்தில் கல் நடுவதையும் மரபாகக் கொண்டுள்ளனர். பாலை வழியில் வரும் காட்டு யானை ஆள் என நினைத்து நடுகல்லை உதைத்து அதன் பெருநகம் சிதைவுற்றுக் காணப்படும். மேலும் பெண் யானைகளைப் போல் கிடக்கும் குன்றுகளின் அருகில் நட்டு வைத்தது போன்ற இயற்கையாக எழுந்த கற்களின் அகன்ற இடத்தைச் செதுக்கிப் பல வடிவங்களை அமைத்தனர். அவற்றை நீராட்டி நறுமணமுள்ள மஞ்சளை ஈரம் புலராப் புறப்பகுதியில் பூசினர். அம்பு கொண்டு அறுத்து உரித்தெடுத்த ஆத்தியின் நாரினால் சிவந்த கரந்தைப் பூவைத் தொகுத்துக் கட்டிய கண்ணியை அக்கற்களில் சூட்டுவர் என்று அகப்பாடல்கள் கூறுகின்றன.

"அத்த நடுகல் ஆள்என உதைத்த

கான யானைக் கதுவாய் வள்உகிர்

இரும்பனை இதக்கையின் ஒடியும்" (Balasubramaniyan, 2004)

என்றும்

"பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்

நட்ட போலும் நடாஅ நெடுங்கல்

அகல்இடம் குயின்ற பல்பெயர் மண்ணி

நறுவிரை மஞ்சள் ஈரம்புறம் ஆர்நார் உரிவையின்

செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி” (Balasubramaniyan, 2004)

என்றும் அகநானூற்றுப் பாடல்கள் விளக்கமளிக்கின்றன. எனவே, இத்தகைய நடுகல் வழிபாட்டு முறைகள், திணைக்குடி வழிபாட்டுக் கூறுகள் மேல் நிலையாக்கம் பெறும் போது திணைக்குடித் தெய்வத்தை வழிபடுகின்றனர். அத்தெய்வம் இருக்கும் பொதுவான சூழல் ஆகியவற்றையும் கணக்கில் எடுக்கப்படும் என்னும் பொதுப்பண்பு நடுகல் வழிபாட்டுக்கும் பொருந்தும் நடுகல் வழிபாடு தனித்து நின்றது என்கிறார் அ.கா.பெருமாள்.

## பண்டைத்தமிழரின் ஆவி வழிபாடு

பண்டையக் காலத்தில் இயற்கையின் மாறுபாட்டைப் புரிந்து கொள்ள இயலாமல் திக்கற்ற சூழலில் பயவுணர்வு ஏற்பட்டது. அப்பயவுணர்வே பின் வழிபாடுகளாக அமைந்தன. அவ்வழிபாட்டின் முதன்மையான வழிபாடாக அமைவது ஆவி வழிபாடாகும். தொன்மைச் சமயம் தோன்றிய முறையை விளக்க முற்பட்ட முதல் மானிடவியல் கோட்பாடே ‘ஆவியுலகக் கோட்பாடு’ எனப்படுகிறது.

சமயத்தின் தொடக்கம் ஆவிகளின் பால் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து தோன்றியது என்கிறார் டைலர். (1871.1) தொன்மைக்கால மக்களின் சமய நம்பிக்கை ஏன் ஆவிகளோடு தொடர்புடையதாக இருந்தது என்பதற்கு டைலர் நீண்ட விளக்கத்தினை முன் வைக்கிறார்.

தொன்மைக்கால மக்கள் அவர்களைச் சுற்றிலும் கண்ணுக்குப் புலனாகாத எண்ணற்ற ஆவிகள் அவர்களின் செயல்களைச் செயல்படுத்துகின்றன என உறுதியாக நம்பினர். அவ்வகையான நம்பிக்கை அவர்களிடம் வேரூன்றக் காரணம், அவர்கள் தம் புறச்சூழலில் நிகழ்ந்த இயற்கையின் விளைவுகளுக்கான காரணங்களை அறியும் பொருட்டு அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட காரணம், காரிய விளக்கங்களேயாகும். இயற்கையோடு மிகவும் ஒன்றி வாழ்ந்த அவர்கள் இயற்கையின் ஆற்றல்களைச் சரிவர புரிந்து கொள்ள இயலவில்லை. அவ்வாறே உளவியல் மனவியல் செயல்களையும் அவர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை (Bakthavatchala Bharathi, 1990).

அடைமழை காரணமாக பெரிய மரங்கள் சாய்ந்தன. மண் கறைகளை அரித்தன. காட்டாறாக வெள்ளம் ஓடின. மழைக் காலத்தில் காதைப்பிளக்கும் இடியும் கண்ணைப் பறிக்கும் மின்னலும் எப்போதாவது வானில் இருந்து விழும் விண்கற்களும் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தின. புயல் சூறாவளி போன்றன மிக உயர்ந்த மரங்களை அடியோடு சாய்த்தன; காட்டுச் சருகுகளையும் மண் புழுதியினையும் சுழற்றி அடித்துப் பெரும் ஓசையை எழுப்பின. இத்தகைய இயற்கைச் சீற்றங்களைக் கண்ட மக்கள் விடையறியாமல் அஞ்சினர். அந்த இயற்கை பண்டைய மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் இழப்பை ஏற்படுத்தின. கொடிய நோய்களும் மக்கள் உயிர்களைப் பறித்தன. இவையாவும் பண்டைய மக்களுக்கு விடையறியாத புதிராகவே இருந்தன.

பண்டை மக்கள் கனவு, நனவு உறக்கம். இறப்பு பற்றி சிந்திக்கத் தொடங்கினர். தூக்கத்திலும் கனவிலும் இறந்த முன்னோர்களைக் கண்டனர். இறந்த முன்னோர்களின் செயல்கள் ஒருவகை பிரமையை ஏற்படுத்தியதோடு பல அனுபவங்களை உண்டாக்கின. பகற்பொழுதில் பண்டைய மக்கள் உறக்கத்தின் போது எதிரொலியைக் கண்டு அஞ்சினர். அதற்கான காரணத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. பண்டைய மக்களின் இத்தகைய அச்சம் நீண்டு கொண்டே சென்றது. நீர் நிலைகள், குளங்கள், ஆறுகள் போன்ற இடங்களில் அவர்கள் குளித்தபோது அவர்களின் நிழல் தெரிவதைக் கண்டு மருண்டனர். அத்தகைய செயல்பாடுகளுக்குப்பின் ஓர் ஆவி உள்ளது. ஆவிகள் தான் அச்செயல்களை எல்லாம் இயக்குகிறது என்று எண்ணினர். இவையே ஆவியுலகக் கோட்பாட்டிற்கு வழிவகுத்தன. இவையே சமய வளர்ச்சிக்கு இன்றியமையாததாக அமைந்தன.

ஆவியுலகக் கோட்பாட்டிலிருந்தே சமயம் தோன்றியது என்று கூறும் டைலர், அக்கோட்பாட்டில் இறப்பு, கனவு ஆகியவற்றோடு தொடர்புடைய ஆன்மாக் கோட்பாடும் அடங்கும் என்கிறார் (Bakthavatchala Bharathi, 1990).

### திணைக்குடிகளின் ஆவி பற்றிய நம்பிக்கைகள்

திணைக்குடிகள் இயற்கையின் ஆற்றலைக் கட்டுப்படுத்துவதற்கும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கும் எடுத்த முயற்சிகளில் ஆவி பற்றிய நம்பிக்கைச் சடங்குகள் தோன்றின. இனக்குழு மனிதன் தூங்கும் போது கனவில் இறந்துபோன தன்னுடைய உறவினர்களைக் கண்டதன் விளைவாக மனிதன் இறந்த பின்னரும் அவனுடைய ஆவி சுற்றித் திரியும் என்ற நம்பிக்கை பிறந்தது என்கிறார் ஜாக்கி என்கிறார். அச்சம் தரக்கூடிய ஆவிகள் மலை மரம் நீர் நிலைகள் ஆகியவற்றில் தங்கியிருக்கும் என இனக்குழு மக்கள் நம்பினர். பண்டைய இலக்கியங்களில் இத்தகைய நம்பிக்கைகள் காணப்படுவதை அறியமுடிகிறது.

### முடிவுரை

மனித இனத்தோற்ற வரலாற்றில் முதன்மைத்துவம் பெருவது நம்பிக்கைகள். பழந்தமிழரின் பழமையான வாழ்வியல் சூழலை நம்பிக்கைகள் விளக்குகின்றன. தொன்மைக் குடிகளின் நம்பிக்கைகளை கள ஆய்வோடு நிரூப்பிக்கின்றது மானிடவியல் ஆய்வு. மானிடரின் உச்ச அச்ச நிலையே நம்பிக்கையின் பிறப்பிடமாகும். அச்சவுணர்வின் வெளிப்பாடு அனைத்தும் இயற்கை ஆற்றல்களின் வெளிப்பாடேயாகும். பண்டைத் தமிழரின் வழிபாட்டில் சமயத் திணிப்புகள் காணப்படவில்லை. எனினும், இன்றைய சமயக் கோட்பாட்டின் முன்னோடியாகப் பண்டைத் தமிழர் வழிபாடுகள் அமைந்துள்ளது. வைதீகத் தாக்கத்தாலே சமய மரபில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பண்டைத் திணைக்குடிகளின் சமயக் கோட்பாடு வேத ஆகமங்களுக்கு முற்றிலும் அப்பாற்பட்டதாகும். திணைக்குடிகளின் தெய்வ அடையாளங்கள், இனத்தின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளன. இது முன்னோர் வழிபாட்டு நிலையை அடையாளம் காட்டுகின்றது. தெய்வங்கள் வாழ்வியல் துணையாக, இல்லில் இருப்பதாக உணர்ந்தனர்.

## References

Avvai Duraisamy Pillai, (1957) Ainkurunuru Source and Descriptive Text, Annamalai University, Chidambaram, India.

Bakthavatchala Bharathi, S. (1990) Panpattu Manudaviyal, Meyyapan Pathippagam, Chidambaram, India

Balasubramaniyan, K.V. (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Kalithogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Pillai, K.K. (2002) Tamilaga Varalaru Makkalum Panpadum, International Institute of Tamil Studies, Chennai, India

Sambath, R., Selvarasu, N., Bakthavatchala Bharathi, S. (2011) Panpattiyal Nookil Pandai Tamilar Samaya Marabukal, Puducheery Moliyiyal Panpattu Araichi Niruvanam, Puducherry, India

Subramaniyam, S.V. (2015) Silappathikaram, Gangai Puthaga Nilayam, Chennai, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

### Funding

No funding was received for conducting this study.

### Conflict of interest

The Author have no conflict of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

N. Vennila, Beliefs in God and Religious Principles of Thinaikudis, Indian Journal of Multilingual Research and Development, Vol 4, Iss 3, (2023) 1-9. DOI: https://doi.org/10.54392/ijmrd2331